

# சீஷத்துவம்



அவர்கள் படவுகளைக் கரையிலே
கொண்டுபோய் நிறுத்தி,
எல்லாவற்றையும் விட்டு,
அவருக்குப் பின்சென்றார்கள்.

லூக்கா 5 : 11

# சீஷத்துவம்

## ஆரம்பம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலக இரட்சகர். அவரை நீங்கள் உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருப்பீர்களானால் நீங்கள் ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறீர்கள். இந்த ஆரம்ப அனுபவம்

1. மனந்திரும்புதல்
2. இரட்சிப்பு
3. மறுபடியும் பிறத்தல்
4. இயேசுவை ஏற்றுக்கொள்ளுதல்

என்ற வார்த்தைகளால் விளக்கப்படுகிறது.


காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்.

மாற்கு 1 :15


பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். I தீமோத்தேயு 1 : 15

ஒருவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்காக, என்னுடைய பாவங்களுக்காக, எனக்குப் பதிலாக சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்தார் என்று விசுவாசிக்கும்போது அவர் இரட்சிக்கப்படுகிறார்.

இரட்சிப்பு என்றால் 'பாவத்திற்குரிய தண்டனையாகிய நரக ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கப் படுகிறார்' என்று பொருள்.



'மனந்திரும்புதல்' என்றால் மனதில் மாற்றம் என்று பொருள். தேவனுடைய ஆவியானவர் பாவ உணர்வைக் கொடுக்கும் போது, பாவ வழிகளை விட்டு, நரகத்தின் திசையை விட்டு முற்றிலுமாக தேவனிடத்திற்கு திரும்புவது மனந்திரும்புதல் ஆகும். இப்படி மனந்திரும்பி, விசுவாசித்து, இரட்சிக்கப்படுகிறவர்கள், ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்றி சீஷராக வாழவேண்டும்.



ஆண்டவராகிய இயேசுவை தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிற வர்கள் நித்தியஜீவனைப் பெற்றி ருக்கிறார்கள். இவர்கள் 'விசுவாசிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

நீங்கள் ஒரு விசுவாசியா? உண்மையான கிறிஸ்தவரா? கிறிஸ்தவர் என்றால்

கிறிஸ்துவை + உடையவர்

கிறிஸ்துவிற்கு + உரியவர்

நீங்கள் இரட்சிக்கப்பட்டு, விசுவாசியாக மாறியிருந்தால் அது தேவன் உங்களுக்கு காட்டியிருக்கும் மாபெரும் கிருபை.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக் கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.

II கொரிந்தியர் 5 : 17

இதோடு இந்த அனுபவம் முடிந்து விடுவதில்லை. நீங்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் ஒரு உண்மையான சீஷராக வளர வேண்டும். 'சீஷத்துவம்' என்ற வார்த்தை இந்த புதிய வாழ்க்கை எப்படிப்பட்டது என்று விளக்குகிறது. சீஷத்துவம் ஆவிக்குரிய வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்த புதிய வாழ்க்கைக்கு ஒரு சில ஒழுங்குகளும் கட்டுப்பாடுகளும் உண்டு. இவைகள் சட்டதிட்டங்கள் போல ஒருவரை நெருக்கி, கட்டாயப்படுத்தி, அச்சுறுத்தி செய்ய வைக்கும் வழிமுறைகள் அல்ல. ஒவ்வொரு நிலையிலும் தன்னார்வத்தோடு தெரிந்துகொள்ளும் தீர்மானங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இயேசு அவர்களை நோக்கி:'என் பின்னே வாருங்கள்', உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

மாற்கு 1 : 17

# சீஷத்துவ அழைப்பு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழிய ஆரம்பத்தில் கலிலேயா கடற்கரையருகே சென்று, அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களோடு அடிக்கடி சந்தித்துப் பேசி, நட்புறவை வளர்த்து அவர்களைத் தன் பின்னே வரும்படி அழைத்தார். அவர்களை பெயர் சொல்லி அழைத்தார். முதலில் இயேசுவின் சீஷர்களாக மாறினவர்கள் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான்.



மத்தேயு 4, மாற்கு 1,

லூக்கா 5,

யோவான் 1

மாற்கு 3 : 13 - 15

(புதிய ஏற்பாட்டில்
பக்கம் 51)

பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.

அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்,

வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்.

சீஷர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு ஒவ்வொருநாளும் கூடவே சென்று அவரைக் கவனித்து அவருடைய போதனைகளைக் கேட்டு அவரைப் போல் மாறுவதற்கு அழைக்கப்பட்டார்கள்.

இன்றைக்கும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளை ஆண்டவராகிய இயேசு இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு அழைக்கிறார். நீங்கள் ஆண்டவராகிய இயேசுவின் சீஷனாக நான் வாழ வேண்டும் என்று என்றைக்காவது யோசித்தது உண்டா? அதை விரும்பியிருக்கிறீர்களா?



## சீஷத்துவம்

**'சீஷன்'** அல்லது **'சீடன்'** என்ற வார்த்தை ஓர் ஆசிரியர் அல்லது ஒரு குருவின் கண்காணிப்பில் கற்றுக்கொள்கிற ஒருவரைக் குறிக்கிறது. ஒரு ஆசிரியரின் கீழ் ஒரு குறிப்பிட்ட வேலையையோ அல்லது ஒரு கலையையோ அவரிடமிருந்து கற்றுக் கொள்கிற வாழ்க்கைக்கு **'சீஷத்துவம்'** என்று பெயர்.

சீஷத்துவத்தை விளக்கப் பல உதாரணங்களைச் சொல்லலாம். அவைகளில் ஒன்று தச்சுத் தொழிலில் நிபுணரான ஒரு தச்சரிடம் ஒரு சிறுவன் வேலைக்குச் செல்கிறான். முதலில் சாதாரண வேலைகளைச் செய்கிறான். அவர் வேலை செய்வதைப் பார்க்கிறான். அவருக்கு உதவி செய்கிறான். அவர் கொடுக்கும் எல்லாக் கட்டளை களுக்கும் கீழ்ப்படிகிறான்.

ஒரு சில ஆண்டுகளில் அவனே ஒரு தச்சு ஆசாரியாய் மாறிவிடுகிறான். இசைக்கருவி ஒன்றை வாசிக்கப் பழகுகின்ற ஒருவரின் அனுபவமும் இப்படித்தான்.

ஒருவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறக்கும்போது அவர் விசுவாசியாக மாறுகிறார்; அந்த விசுவாசி ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறவும், வளர்ச்சி அடையவும், தேர்ச்சிபெறவும் எடுத்துக்கொள்ளும் எல்லா முயற்சிகளும் சீஷத்துவத்தில் அடங்கும்.



## சிஷத்துவம் : இயேசுவும் சீஷர்களும்

2000 ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது கற்றுக்கொடுக்கிறவராக இருந்தார். 12 நபர்களை தம்முடைய சீடர்களாக தெரிந்துகொண்டு செல்லும் இடமெல்லாம் அழைத்துச் சென்றார். அவர்களும் அவருக்குப் பின்சென்றார்கள். *(மத்தேயு 10:1-4; மாற்கு 3:13-19; லூக்கா 6:13-16; அப்போஸ்தலர் 1:13)* இப்பகுதியில் சீஷர்களின் பெயர்ப் பட்டியல் தரப்பட்டுள்ளது.

1. பேதுரு 2. அந்திரேயா

3. யாக்கோபு 4. யோவான்

5. பிலிப்பு 6. பர்த்தொலொமேயு

7. தோமா 8. மத்தேயு

9. அல்பேயுவின் குமாரன் யாக்கோபு

10. ததேயு (எ) லெபேயு 11. கானானியனாகிய சீமோன்

12. யூதாஸ்காரியோத்து

## சீஷத்துவம்: நோக்கம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்றரை ஆண்டுகள் ஊழியம் செய்த போது அதிகமான நேரம் 12 சீஷர்களோடு செலவழித்தார். செல்லும் இடமெல்லாம் அவர்களைக் கூட்டிச்சென்று, தனிக்கவனம் செலுத்தினார். சுவிசேஷங்களில் **இயேசுவும் சீஷர்களும்** என்ற தலைப்பில் கவனிக்கும் போது சீஷத்துவத்தின் நோக்கம் கீழ்க் காணும் 5வாக்கியங்களில் தெளிவாகின்றன.



1. இயேசு கிறிஸ்து சீஷர்களைத் தனித் தனியே, பெயர் சொல்லி அழைத்தார்.
2. சீஷர்கள் தன்னோடு இருக்க வேண்டுமென்று விரும்பினார்.
3. சீஷர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான வித்தியாசமான தன்மைகள், தாலந்துகள், திறமைகள் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒருவரிடம் இருந்து ஒருவரும், குழுவாகவும் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார்.
4. சுவிசேஷத்தை அவர்கள் உலகமெங்கும் அறிவிக்க வேண்டும் என்று கட்டளை யிட்டார்.
5. விசுவாசிகளை சீஷர்களாக உருவாக்கி ஆண்டவராகிய இயேசுவின் சார்பில் அவர் கொடுத்த கட்டளைகளையும், திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டுமென்று பணித்தார்.

## சீஷத்துவம் - முக்கிய அம்சங்கள்

1. யோவான் 8:31 - நிலைத்திருத்தல்
2. லூக்கா 9:23 - பின்பற்றுதல்
3. மத்தேயு 11:29 - கற்றுக்கொள்ளுதல்
4. யோவான் 13:34,35-அன்புகூருதல்
5. யோவான் 15:8 - கனிகொடுத்தல்

இந்த 5 வசனங்களின் குறிப்பிடங்களையும் (References) கவனியுங்கள். அதிகார எண்களைப் பார்த்தீர்களா? யோவான் சுவிசேஷத்தில் எத்தனை முறை வருகிறது என்று பாருங்கள்.ஒவ்வொரு வசனத்திலும் உள்ள முக்கிய கருத்தைக் கவனியுங்கள்.

சீஷத்துவம் என்ற வார்த்தை வேதாகமத்தில் இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் சீஷன், சீஷர்கள் என்ற வார்த்தைகள் பலமுறை வருகின்றன. யோவான் சுவிசேஷத்திலும், அப்போஸ்தலர் நடபடிகளிலும் பலமுறை வருகின்றன. எங்கெல்லாம் வருகின்றன என்பதைக் கண்டுபிடித்து குறித்துக் கொள்ளுங்கள்.

***சீஷன் யார்? சீஷன் எப்படிப்பட்டவன்? சீஷன் என்ன செய்ய வேண்டும்?***

⏩ **சீஷன் வேதாகம உபதேசத்தில் நிலைத்திருக்கிறான்:** இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். - *யோவான் 8:31*

⏩ **சீஷன் சுயவெறுப்பின் பாதையைத் தெரிந்துகொண்டு ஆண்டவரைப் பின்பற்றுகிறான்:** பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

*லூக்கா 9 : 23*



» **சீஷன் ஆண்டவரிடமிருந்து கற்றுக் கொள்ளுகிறான்:** .... என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். - *மத்தேயு 11 : 29*

» **சீஷர்கள் ஒருவரிலொருவர் அன்பு கூருகிறார்கள்:** நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

- *யோவான் 13 : 34,35*

» **சீஷன் கனி கொடுக்கிறான்:**

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

- *யோவான் 15 : 8*




## 1. உபதேசத்தில் நிலைத்திருத்தல்

இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் அவருடைய வார்த்தைகளின்படி வாழ வேண்டும்.ஒரு பயிற்சியாளரின் கீழ் பயிற்சி பெறுகிறவர்கள் அவர் என்ன சொல்லுகிறார் என்பதையும், அவர் சொல்லுவதை அப்படியே செய்து பழக வேண்டும் என்பதையும் அதிகக் கவனமாக யோசிப்பார்கள்.

நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளருவதற்கு உபதேசம் தேவை. நாம் எப்படி வாழ வேண்டும்? ஏன் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நம்முடைய வாழ்க்கையை அமைக்க வேண்டும்? என்று உபதேசங்கள் விளக்குகின்றன. உபதேசத்தைக் கேட்பது மட்டுமல்ல; உபதேச வசனங்களைத் தொடர்ந்து தியானிப்பதும், அந்த வசனங்களின்படி விருப்பங்களையும், வாழ்க்கை முறைகளையும் தொடர்ந்து மாற்றியமைத்துக் கொண்டிருப்பதுதான் உபதேசத்தில் நிலைத்திருப்பது என்பதாகும்.

கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத் திருப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார்; துணை செய்கிறார். வசனத்தின் வெளிச்சத்தால் தூண்டு தலைப் பெறுவது ஆரம்பம். ஆனால் வசனத்தின்படி வாழுவதற்கு தொடர்ந்த தீர்மானமும், முயற்சியும் தேவை.



## 2. பின்பற்றுதல்

ஆண்டவராகிய இயேசுவை நேசிக்கிறவர்களே அவரைப் பின்பற்ற முடியும். இயேசுவின் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு ஏதோ உணர்ச்சி வசப்படும் பாசம் மட்டுமல்ல; **நம்முடைய சுயத்தை வெறுத்து சிலுவையை சுமப்பதே அவரைப் பின்பற்றுவதற்கான அடையாளங்களாகும்.**

சுயத்தை வெறுத்தலுக்கு ஆதாரமான 5 முக்கியமான வசனங்களின் குறிப்பிடங்கள் (References) கீழே தரப்பட்டுள்ளன.
இந்த வசனங்களை உங்கள் வேதாகமத்தில் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.
அதிகாரங்களின் இலக்கங்களைப் பாருங்கள் - 8, 10,12,14,16 என இரட்டைப்படை எண்களாக இருக்கின்றன. இதில் நடுவில் உள்ள எண் **12.**

இது நமக்கு **12 சீஷர்களை** நினைவு படுத்துகிறது.



| | | |
|---|---|---|
| மாற்கு | **8:34** | *வசனங்களின் எண்களை* |
| மத்தேயு | **10:38** | *மட்டும் பாருங்கள். உங்கள்* |
| யோவான் | **12:26** | *நினைவில் வைத்துக்* |
| லூக்கா | **14:26,27** | *கொள்ள எண்களை* |
| மத்தேயு | **16:24** | *தொடர்புபடுத்த முடியுமா?* |

## பின்பற்றுதல் (சுயத்தை வெறுத்தல்)

## 5 முக்கிய உண்மைகள் :

1. உடலுக்குரியவைகள் **விட்டுக்கொடுக்க,**
2. உடைமைகளை **இழக்க**
3. உரிமைகளை **ஒப்புக்கொடுக்க**
4. உறவுகளை **வெறுக்க**
5. உயிரை **அர்ப்பணிக்க ஆயத்தம் தேவை.**

இவைகள் ஐந்தையும் விட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அதிகமாக நேசிக்க வேண்டும். அவருக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க, இழக்க, ஒப்புக்கொடுக்க, ஆயத்தம் தேவை. இப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தல், அர்ப்பணித்தல், பிரதிஷ்டை சீஷத்துவத்தில் நமக்கிருக்கும் உறுதியைக் காட்டுகிறது.

## 3. கற்றுக்கொள்ளுதல்

சீஷத்துவத்தின் அடிப்படையான அம்சங்களில் **கற்றுக்கொள்ளுதல்** என்பது முக்கியமானதாகும். சிறுவயதிலிருந்தே கற்றுக்கொள்ளுதலின் வாயிலாக நாம் பல திறமைகளை வளர்த்துக் கொள்கிறோம். நீங்கள் எழுத, படிக்க, சைக்கிள் ஓட்ட, சமைக்க கற்றுக்கொண்ட விதத்தையும், நேரத்தையும் நினைவு படுத்திப் பாருங்கள். புதிய பாடல்களை எப்படி கற்றுக்கொள்ளுகிறீர்கள்?

நம்முடைய பெற்றோரும், ஆசிரிய, ஆசிரியைகளும் அநேகக் காரியங்களை நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சீஷனாய் இருப்பவர்களுக்கு எப்பொழுதும் கற்றுக் கொள்வதற்கான ஆர்வமும், துடிப்பும் இருக்க வேண்டும்.

நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாக மாற, உருவாக, விளங்க விரும்பினால் ஒவ்வொருநாளும்...

**நேற்று நான் என்ன கற்றுக்கொண்டேன்?**

**இன்றைக்கு நான்கற்றுக்கொள்ளுகிற வைகள் யாவை?**

**நாளைக்கு எதை கற்றுக்கொள்ளப் போகிறேன் என்ற சிந்தையோடு இருக்க வேண்டும்.**

கற்றுக்கொள்ளுதல் என்பது ஒரு பழக்கமாகும். (Habit) அதை ஓர் ஒழுங்கு முறையாகவும் (Discipline) எடுத்துக் கொள்ளலாம். கற்றுக்கொள்ளுதல் நம்முடைய வாழ்க்கையைப் பக்குவப்படுத்துகிறது. *நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். (மத்தேயு 11:29)*

என்று இயேசு சீஷர்களை அழைத்தார். இன்றைக்கும் நம்மை அப்படியே கற்றுக் கொள்ள அழைக்கிறார்.

கல்வி பயிலுவதில் கற்றுக்கொள்ளு வதற்கான திட்டமும், காலஅளவும், வழிமுறையும் இருப்பதைப்போல சீஷத்து வத்திலும் கற்றுக்கொள்ளுவதற்கு திட்டமும், வழிமுறையும் உண்டு. வெவ்வேறு கால அளவுகளில் நாம் தொடர்ந்து கற்றுக் கொண்டே முன்னேற வாய்ப்பு உண்டு. சீஷத்துவம் ஆவிக்குரிய வளர்ச்சியையும், கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் உறவின் நெருக்கத்தையும், சிந்தையின் தேர்ச்சி யையும் காட்டுகிறது. ஆகவே பொறுமையுடன் கற்றுக்கொள்ளும் பாதையில் நாம் முன்னேற வேண்டும்.



## 4. அன்புகூருதல்

ஆண்டவராகிய இயேசுவின் சீஷர்கள் அவரை நேசிப்பவர்களாக மட்டுமல்ல; ஒருவரை ஒருவர் நேசிக்கிறவர்களாகவும் வளர வேண்டும். இயேசுவை விசுவாசித்து வளர விரும்பும் சீஷர்களுக்கு ஒருவரையொருவர் நேசிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதற்குப் பல காரணங்கள் உண்டு.


ஆனால் மற்றவர்களைத் தன்னைவிட முக்கியப்படுத்தி யோசிக்கவும், தன்னைத் தாழ்த்தி மற்றவர்களுக்கு உதவி செய்யவும், மற்றவர்களோடு சேர்ந்து ஒரு குழுவாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவும் நாம் பழகிக்கொள்ள வேண்டும்.


ஒரு குழுவில் அல்லது ஒரு குறிப்பிட்ட ஐக்கியத்தில் வாழும் விசுவாசிகள் மற்றவர்களின் குறையை நேரடியாகப் பார்க்க முடியும்.

மிகைப்படுத்திப் பேச முடியும்.ஆனால் நாம் ஒருவரையொருவர் மனப்பூர்வமாகத் தொடர்ந்து நேசிக்க வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

## 5. கனிகொடுத்தல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற விசுவாசிகளின் வாழ்க்கை பலன் தருகிறதாய் இருக்க வேண்டும். ஒரு மாங்கன்றை நடுகிறோம். அது செடியாய் வளர்ந்து மரமாகி கனிகளைத் தருகிறது. அந்த மாமரம் நூற்றுக் கணக்கில் கனி தந்து விருத்தி அடைகிறது.





அதைப் போல ஒவ்வொரு விசுவாசியும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருப்பதால். அவரையே சார்ந்து இருப்பதால் அவருடைய கிருபையினாலும், வல்லமையினாலும் நல்ல ஆவிக்குரிய பலன்களைத் தரமுடியும். **'கனிதருதல்'** என்ற வார்த்தை கிறிஸ்துவின் தன்மை நம்முடைய வாழ்க்கையில் காணப்படுவதையும், மற்றவர்கள் நம் வாயிலாக ஆதாயப்படுத்தப் படுவதையும், நாம் ஆவிக்குரிய தலைமைத்துவ பொறுப்புகளை எடுப்பதையும் காட்டுகிறது.

கனி என்பது வெளிப்பிரகாரமாக காணப்பட்டாலும், அது உள்ளிருந்து வெளிவருவதாகும். ஒரு செடி மரமாகி கனி தருவதற்கு காலம் (Time) ஆகிறது. அதைப் போல பண்பு வளர்ச்சிக்கும் காலம் ஆகிறது. அந்தந்தப் பருவத்தில் அந்தந்தக் கனிதரும் (Season) அனுபவமும் உண்டு.

## சீஷத்துவம் - ஒழுங்கும் கட்டுப்பாடும்

ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஒழுங்கும் கட்டுப்பாடும் தேவை. பாடம், வேலைகளைக் கற்றுக்கொள்வதற்கும் எப்படி விதிமுறைகள், பயிற்சி தேவையோ அதைப்போல் இயேசுவின் சீடர்களுக்கும் சில ஒழுங்குகளும் கட்டுப்பாடுகளும், புதிய பழக்க வழக்கங்களும், பயிற்சியும் தேவை.

அனுதினமும் இந்த சீரமைக்கும், சரியாக்கும் ஒழுங்குகளைக் கடைபிடிக்கும் போது நமக்குள்ளே கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய தன்மை உருவாக, வளர்ச்சியடைய பலன் பெற ஏதுவாகிறது.

தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு.

I தீமோத்தேயு 4 : 7

## ஒழுங்குகளையும்,கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டிய பகுதிகள்

1. ஜெபம் / உபவாசம்
2. வேதவசன தியானம்
3. விசுவாசிகளோடு ஐக்கியம்
4. சாட்சியான வாழ்க்கை
5. எளிமையான வாழ்க்கை
6. கற்றுக்கொள்ளும் மனப்பான்மை
7. பாவப்பழக்கங்களை விட்டுவிடுதல்

பரிசுத்தமான பக்தியுள்ள வாழ்க்கைக்கு தேவையான பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்கவும் பயிற்சியும், முயற்சியும் தேவை.

மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

I கொரிந்தியர் 9 : 27

## நினைவில் நிறுத்திக்கொள்ள...

அதிகார எண்களைப் பாருங்கள்; புத்தகங்களை கவனியுங்கள். இந்த அதிகாரங்களில் எந்தெந்த வசனத்தில் சீஷத்துவத்தைப் பற்றிய கருத்து வருகிறது? என்று கண்டுபிடியுங்கள்.

| | |
|---|---|
| மாற்கு 1 | யோவான் 2 |
| மத்தேயு 3 | லூக்கா 5 |
| மாற்கு 6 | மாற்கு 8 |
| லூக்கா 9 | மத்தேயு 10 |
| மத்தேயு 11 | யோவான் 12 |
| யோவான்13 | லூக்கா 14 |
| யோவான்15 | மத்தேயு 16 |
| யோவான்17 | |



**சீஷத்துவம் : சிந்தித்துப் பாருங்கள்!**

- நீங்கள் வேதவசனத்தை அனுதினமும் தியானிக்கிறீர்களா?
- ஒவ்வொரு நாளும் ஆண்டவரிடமிருந்து என்ன கற்றுக்கொள்ளுகிறீர்கள்?
- உங்களுக்கு சுயத்தை வெறுக்கும் அனுபவம் இருக்கிறதா?
- உங்களுடைய குணங்களில் என்ன மாற்றங்கள் வந்திருக்கின்றன?
- நீங்கள் மற்ற விசுவாசிகளிடம் அன்பு பாராட்டுகிறீர்களா?
- சீஷத்துவம் என்பதைக் குறித்து என்ன விளங்கியிருக்கிறீர்கள்?
- நீங்கள் சீஷனா? விசுவாசியா?
- விசுவாசி சீஷனாக மாற என்ன செய்ய வேண்டும்?
- சீஷராக்குவது என்றால் என்ன?
- நீங்கள் எப்படி இயேசுவின் சீஷரானீர்கள்?

- நீங்கள் இயேசுவின் சீஷனாக மாறுவதற்கு உதவி செய்தவர்கள் யார்?
- நீங்கள் யாரை சீஷராக்க முயற்சி செய்கிறீர்கள்?

## ***ஆண்டவராகிய இயேசுவும் 12 சீஷர்களும்***



**நான் இயேசுவின் சீஷர்களில் ஒருவனா?**


இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் அதிகமாக அறிந்துகொள்ள உதவும் வெவ்வேறு வகையான இலக்கியங்கள், DVD, ACD எங்களிடத்தில் உண்டு.

நீங்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

பின் தொடர்பணி,
காந்திநகர் கிழக்கு,
ஒட்டன்சத்திரம் - 624 619
☎ 04553-240623, 89030 11350
E- mail : selwynde@gmail.com

மொத்த புத்தகங்களுக்கான
நன்கொடை ரூபாய். 350 / -
கூரியர் செலவு தனி

Feb 17


மத்தேயு 11 : 29

# சீஷத்துவம்

மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் விசுவாசிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். விசுவாசிகள் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக வளர வேண்டும். தேர்ச்சிப் பெற வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற வாழ்க்கை சீஷத்துவம் என்று அழைக்கப்படுகிறது.

இச்சிறு புத்தகத்தில் சீஷத்துவத்தின் விளக்கங்கள் உண்மைகள் குறிப்புகளாகத் தொகுக்கப்பட்டு தரப்பட்டிருக்கின்றன. பலமுறை வாசித்துத் தியானியுங்கள்.

**F.U.L. Series B.L.No.31**

பின்தொடர்பணி, காந்திநகர் (கிழக்கு),
ஒட்டன்சத்திரம் - 624 619
© 04553 - 240623, 89030 11350
E-mail : selwynde@gmail.com

© Follow-up ministries Trust, Oddanchatram - 624 619
Prinited at: Subhi Printers, Oddanchatram . © 9842109368